IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 49/2015
Deposition of witness for PW5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாரதி | Caste | : | |
| Husband Name | : | ரவிச்சந்திரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of November, 2025.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கின் வாதியும், முதல் பிரதிவாதியும் என் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். முதல் பிரதிவாதிதான் மூத்தவர் என்றால் சரிதான். மேற்படி இருவரும் அதாவது வாதியும், முதல் பிரதிவாதியும் எனது அண்ணன்கள் என்றால் சரிதான். எனது அண்ணன்கள் இருவரும் இராணுவத்தில் பணிபுரிந்தார்கள் என்றால் சரிதான். என் பெரிய அண்ணன் 1985 ல் இராணுவத்தில் சேர்ந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

2. என் பெரிய அண்ணன் வேலைக்கு சேர்ந்து எத்தனை ஆண்டுகள் கழித்து என் சிறிய அண்ணன் வேலைக்கு சென்றார் என்றால் 19 வயதில் வேலைக்கு சேர்ந்தார். முதல் பிரதிவாதி வேலைக்கு சேர்ந்து 8 வருடங்கள் கழித்துதான் வாதி வேலைக்கு சென்றார் என்றால் சரிதான். மேற்படி இருவரும் இராணுவத்தில் சேர்ந்ததற்கு பிறகுதான் அவர்களுக்கு வருமானம் என்றாலும் அதற்கு முன்பு வீட்டிற்கு எந்த வருமானமும் இல்லை என்றாலும் சரியல்ல, நாங்கள் ஆடு, மாடு, பயிர் வைத்திருந்தோம். ஊரிலேயே நாங்கள் பட்டு பூச்சி வளர்த்து வந்தோம். அதன் மூலம் வருமானம் வந்தது.

3. மேற்படி வருமானம் குடும்ப வருமானம் என்றாலும் தனிப்பட்ட

வருமானம் வாதியாலும் மற்றும் முதல் பிரதிவாதியாலும் வரவில்லை என்றாலும் சரிதான். தாவா சொத்து ஆதியில் சொக்கலிங்கம் மற்றும் முனிசாமியின் சொத்து என்றால் சரிதான். மேற்படி இருவரும் என் தாய்மாமன் என்றால் சரிதான். மேற்படி முனிசாமியின் மகளைத்தான் வாதி திருமணம் செய்தார் என்றால் சரிதான்.

4. 1988 ல் தாவா சொத்து கிரையம் பெறப்பட்டது. அப்போது எனக்கு 17 வயது இருக்கும். கிரையம் எவ்வளவுக்கு கொடுக்கப்பட்டது என்றும் யார்யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு கிரையத்தொகை பேசப்பட்டது என்றால் ரூ.9000/- கிரையம் பேசப்பட்டது, ஆனால் ஒரே தவணையாக கொடுக்காமல் கொஞ்சம் கொஞ்சமாக கொடுக்கபட்டு முழுவதையும் முடித்தார்.

5. வாதி 12 ம் வகுப்பு வரை படித்துள்ளார். பள்ளி படிப்பை முடித்துதான் மேற்படி வேலையை செய்தார் என்றால் சரிதான். ஆனால் படிக்கும்போதும் விடுமுறையின் போதும் அவ்வபோது பட்டு பூச்சி வளர்க்கும் வேலையை செய்தார். இவ்வழக்கு விவரங்கள் யார் மூலம் எனக்கு தெரியவந்தது என்றால் வாதி சுப்பிரமணி சொல்லி எனக்கு தெரியும். அதற்கு முன்பு நடந்த பிரச்சனை எனக்கு தெரியாது.

6. இதற்கு முன் யார்யார் சாட்சி கூறினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எங்களுக்கும் முதல் பிரதிவாதிக்கும் பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. முதல் பிரதிவாதி என்னிடம் வழக்கு குறித்து எதுவும் கூறுவில்லை. தாவா சொத்தின் மூல பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. எனது மாமா இருவரும் விற்பனை செய்த தாவா சொத்தின் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. தாவா சொத்தின் பட்டா, சிட்டா போன்ற விவரங்கள் சுப்பிரமணி மீதுதான் இருந்தது. தற்போது பட்டா, சிட்டா போன்ற வருவாய் ஆவணங்கள் 2ம் பிரதிவாதியின் மீது உள்ளது. 2ம் பிரதிவாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்ததால்தான் வருவாய் ஆவணங்கள் அவர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல.

8. எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் பிரச்சனை என்பதால் நான் அவருக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி 2ம் பிரதிவாதி லட்சுமணனுக்கு தாவா சொத்தை கிரையம் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்லும் சாட்சிக்கும் எனது பிரமாண வாக்குமூலத்திற்கும் முரண்பாடு உள்ளதல் எனது சாட்சி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றாலும் அதேபோல் வாதி சொன்ன சாட்சியத்திற்கும் என்னுடைய சாட்சியத்திற்குமே முரண்பாடு உள்ளதால் எனது சாட்சி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

9. முதல் பிரதிவாதிதான் இராணுவத்தில் வேலை செய்து அந்த சொத்தை வாங்கினார் என்றாலும் அவர் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக வாதிக்கு சாதகமாக சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1988ல் நடந்த கிரையத்தை பற்றி எனக்கு தெரியாது என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதன்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI